# மணப்பாறை நகராட்சி

**2020- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் (14.09.2020) 31 – ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 14.09.2020 | **பொருள் – 1**<br>2020-21ம் ஆண்டு IUDM திட்டத்தின் கீழ் மணப்பாறை நகராட்சி பகுதிகளில் உள்ள மண்சாலைகளை தார்சாலைகளாக (Formation of BT) மாற்றி அமைக்க கீழ்க்கண்ட சாலைகளை தேர்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் அனுப்பி வைக்கப்பட்டது. | **தீர்மான எண்.840 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் (தார்சாலைகள்) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|---|
| 1 | 11 | விராலிமலை ரோடு அண்ணாநகர் | 240 | 4.10 | ரூ.218.00 |
| 2 | 21 | நேதாஜி நகர் | 140 | 4.10 | |
| 3 | 21 | சந்தியாகுபுரம் | 800 | 4.10 | |
| 4 | 20 | சிவசக்தி நகர் குறுக்கு தெரு | 200 | 5.00 | |
| 5 | 20 | ராஜூவ் நகர் 16-வது குறுக்கு தெரு | 180 | 4.10 | |
| 6 | 20 | ராஜூவ் நகர் 14-வது குறுக்கு தெரு | 220 | 4.10 | |
| 7 | 20 | ராஜூவ் நகர் 11-வது குறுக்கு தெரு | 150 | 4.10 | |
| 8 | 20 | ராஜூவ் நகர் 10-வது குறுக்கு தெரு | 110 | 4.10 | |
| 9 | 24 | வீராட்சி தெற்கு தெரு | 240 | 4.10 | |
| 10 | 20 | மணப்பாறைப்பட்டி மேற்குகளம் | 140 | 4.10 | |
| 11 | 20 | மணப்பாறைப்பட்டி 4-வது குறுக்கு தெரு | 240 | 4.10 | |
| 12 | 20 | மணப்பாறைப்பட்டி 3-வது குறுக்கு தெரு | 400 | 4.10 | |
| 13 | 20 | மணப்பாறைப்பட்டி 2-வது குறுக்கு தெரு | 150 | 4.10 | |
| 14 | 20 | மணப்பாறைப்பட்டி குறுக்கு தெரு | 100 | 4.10 | |
| 15 | 20 | மணப்பாறைப்பட்டி CPM வீட்டின் எதிரில் | 100 | 4.10 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | 20 | வித்யாலயா பள்ளி அருகில் | 300 | 4.10 | |
| 17 | 5 | அத்திக்குளம் | 290 | 4.10 | |
| | | **மொத்தம்** | **4.000** | | **ரூ.218.00** |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.303 நாள்.09.09.2020 ன்படி மேற்கண்ட பணிகளுக்கு கீழ்காணும் நிதி ஆதார அமைப்பில் (Funding Pattern) மேற்கொள்ள IUDM -2020-21 க்கான திட்ட அனுமதி வழங்கும் குழு அனுமதியளித்துள்ளதாகவும், இதற்கு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சிக் குழுமம் (IUDM ) 2020–21 திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|
| மணப்பாறை | 218.00 | 174.40 | 43.60 |

எனவே, மேற்காணும் நிதி ஆதார அடிப்படையில் சாலை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம்அனுமதிக்கலாம்

| | | |
|---|---|---|
| 14.09.2020 | **பொருள் – 2**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்களின் கடிதம் ந .க.எண்.32978/J2/2018 நாள்.25.03.2019ன்படி, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை முழுமையாக செயல்படுத்திட 107 பணியாளர்கள் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதன்பேரில், இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை செய்மையாக செயல்படுத்திட 01.09.2019 முதல் 31.08.2020 வரை சரம் என்விரோ சர்வீஸ் (பி)லிட், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது . கொரோனா நோய் பரவல் காரணமாக முன்கூட்டியே ஒப்பந்த நட வடிக்கைகள் மேற்கொள்ள இயலவில்லை . எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி சுணக்கம் மற்றும் வழுவின்றி செயல்பட்டு வந்த சரம் என்விரோ சர்வீஸ்(பி) லிட், சென்னை ஒப்பந்த விலை விகிதத்தில் தொடர்ந்து பணி செய்ய சம்மதம் தெரிவித்ததின் பேரில் அனுமதி 01.09.2020 முதல் 30.11.2021 வரை பணி செய்ய அனுமதியளிக்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br>எனவே 01.12.2020 முதல் 30.11.2021 வரையிலான ஒரு ஆண்டுக்கு 107 ஒப்பந்த பணியாளர்கள் கொண்டு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவின விபரம் | **தீர்மான எண்.841 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | விபரம் | தொகை (நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித்தலைவர் , திருச்சிராப்பள்ளி அவர்களின் 2020-21ஆண்டிற்கான விலை விகிதம் | 385.00 |
| 2 | EPF Share (Employer - 12%) | 46.20 |
| 3 | ESI Share (3.25%) | 12.51 |
| 4 | Administrative Charges (5%) | 19.25 |
| 5 | சீருடை (ரூ.1000/365 நாள்) | 2.73 |
| 6 | காப்பீடு (0.5%) | 1.92 |
| | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு மொத்த ஊதியம் | 467.61 |

நபர் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கான ஊதியம் (26 நாட்கள் ஞாயிறு நீங்கலாக) } **12157.86**

நபர் ஒன்றுக்கு ஒரு வருடத்திற்கான ஊதியம் : **145894.32**

107 நபர்களுக்க ஒரு வருடத்திற்கான ஊதியம் : **15610692.24**

எனவே மேற்காணும் விபரப்படி 01.12.2020 முதல் 30.11.2021 முடிய ஓராண்டு காலத்திற்கு 107 ஒப்பந்த பணியாளர்கள் கொண்டு பணி செய்ய ஒப்பந்த நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும் , அதற்கான தோராய செலவினம் ரூ .156.11 லட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

---

14.09.2020

**பொருள் – 3**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந .க.எண்.25480/ஜே3/2015 நாள்.13.06.2016 கடிதத்தின்படி மணப்பாறை நகராட்சியில் பணிபுரியும் அடிப்படை (கடைநிலை) பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு 2020-21ஆம் ஆண்டிற்கு சீருடை மற்றும் தையல் கூலி வாங்கி வழங்க உத்தேச செலவினத் தொகை ரூ .2,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.842**
**அனுமதிக்கப்பட்டது.**

14.09.2020

**பொருள் :4**

இந்நகராட்சியில் இயங்கிவரும் கணினிகள் மற்றும் கணினி சார்ந்த உபகரணங்களுக்கான ஆண்டு பராமரிப்பிற்கான ஒப்பந்தம் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு பராமரிப்பிற்கான ஒப்பந்தம் 14.11.2020 -ம் தேதியுடன் முடிவடைவதால் 15.11.2020 முதல் 14.11.2021 வரையிலான ஆண்டு பராமரிப்பினை சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கீழ்காணும் நிறுவனங்களிடமே வழங்கி பராமரிப்பினை மேற்கொள்ளவும் உத்தேச செலவினத் தொகை ரூ. 2,00,000/- க்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | கணினி சார்ந்த உபகரணங்கள் |
|---|---|---|
| 1. | Sumaraj IT Solution | கணினிகள் மற்றும் பதிவெடுக்கும் இயந்திரங்கள் |
| 2. | M/S. C. Technology | லைன் பிரிண்டரின் ஆண்டு பராமரிப்பு |
| 3. | ULTRA POWER SOLUTION | 5KVA யூபிஎஸ் |
| 4. | Novateur Electrical and digital Systems Pvt Ltd | 2KVA மற்றும் 5 KVA யூபிஎஸ் |

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.843**
**அனுமதிக்கப்பட்டது.**

---

14.09.2020

**பொருள் :5**

இந்நகராட்சியின் கணினி சர்வர் அறையில் இதுநாள் வரை இயங்கிவரும் HITACHI SPLIT AC MODEL No. RAU518HSWG Sl.No.140G14358 DGS&D-ல் 08.07.2014-ல் நிறுவப்பட்டது. 1 வருடம் மட்டுமே வாரண்டி 07.07.2015-ம் தேதியுடன் முடிவுற்று தற்போது வரை நல்ல நிலையில் இயங்கி வருகிறது . மேற்கண்ட குளிர்சாதன இயந்திரத்தை (AC Machine) ஆண்டு பராமரிப்பு தனியார் நிறுவனமான Hittachi நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்து பராமரிக்க உத்தேச செலவினத் தொகை ரூ .7080/-க்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகறிது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2519/2020/A1)

**தீர்மான எண்.844**
**அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| 14.09.2020 | **பொருள் :6**<br>இந்நகராட்சியில் இயங்கிவரும் LAPTOP - 2 Nos. 04.04.2016 ல் நிறுவப்பட்டு 3 ஆண்டுகள் வாரண்டி காலம் 14.04.2019/ம் தேதியுடன் முடிந்த நிலையிலும், Dell core 15Nos./8GB ram /500 GB HDD/DVD writer/18.5" LED monitor /keyboard/optical mouse/1 Gigabyte ethernet controller and HP MULTI PURPOSE LASER PRINTERS 10 Nos. ( HP LASER JET PRO MFP M128 FN-4Nos., HP LASER JET PRO MFP M226dn-3 Nos., HP LASER JET PRO 400 MFP M425dn-3 Nos.) 15.04.2016 ல் நிறுவப்பட்டு 3 ஆண்டுகள் வாரண்டி காலம் 14.04.2019-ம் தேதியுடன் முடிந்த நிலையிலும் இணையதள பயன்பாடு உள்ள கணினிகளில் Anit Virus ஏற்படுத்தி Virus-லிருந்து பாதுகாப்பதுடன் ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூபாய் **1,50,000/-** செலவினத்தை பொது நிதியிலிருந்தும், டெண்டர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>அனுமதிக்கலாம் (ந.க.எண்.2518/2020/A1) | **தீர்மான எண்.845**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 14.09.2020 | **பொருள் :7**<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TDY 1660-ல் தகுதிச்சான்று பெற மராமத்து செய்யும் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மூலம் மேற் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ .72,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.846**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 14.09.2020 | **பொருள் :8**<br>தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIP 2020-21) திட்டத்தின் கீழ் புதிதாக தார்சாலைகள் அமைக்க பணி மேற்கொள்ள ரூ **.488.00/-** லட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.9025/2020/E3 நாள்.16.07.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1003/2020/DO2 நாள்.22.07.2020-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை 28.07.2020-ம் தேதி ஆங்கில தினசரி நாளிதழ் Financial Express மற்றும் Namadhu Amma தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு eyedea brand sollutions, சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ள பில் பட்டியல் தொகை ரூ .40.478/-ஐ வழங்குவதற்கும் செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பொருள் வைக்க ஆணையரின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம் (ந.க.எண்.**1460/2020/E1)** | **தீர்மான எண்.847**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

14.09.2020

**பொருள் :9**

மணப்பாறை நகராட்சி வார்டு எண் .16-ல் சேதுரெத்தினபுரம் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிகளை வருவாய் நிதி திட்டம் 2020-21-ன் கீழ் மேற்கொள்வதற்கு 11.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட் சத்தில் | ஒப்பந்ததார பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.16-ல் சேதுரெத்தினபுரம் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 9.60 | திரு.வி.ஆனந்தன் | **- 0.004%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைவு |
| 2 | | | திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் | **16.57%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப் பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு .வி.ஆனந்தன் 0.004% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார் . எனவே திரு .வி.ஆனந்தன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

அனுமதிக்கலாம் (ந.க.எண்.**2067/2020/E1)**

**தீர்மான எண்.848**
**அனுமதிக்கப்பட்டது.**

14.09.2020

**பொருள் :10**

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை சென்னை அவர்களின் கடிதம் 4736/IDSP/2020 நாள் 17.05.2020-ல் அறிவுறுத்தியுள்ளவாறு கிருமிநாசினி கொண்டு கைகள் சுத்தம் செ ய்ய பயன்படும் தானியங்கி இயந்திரம் பெற தனி அலுவலர் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன விபரம்.

**தீர்மான எண்.849**
**அனுமதிக்கப்பட்டது.**

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை | GST | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஸ்டேஜிங் எலிமென்ட்ஸ், 1,பாகீரதி அம்மாள்தெரு, T.நகர், சென்னை. | 27320 | 4917,60 | 32237.60 |
| 2 | பிரங்கோ கான்சப்ட்ஸ், 352/88, திவினி காகிப் கார்டன் தெரு, ராயப்பேட்டை, சென்னை | 35000 | 6040 | 41040 |
| 3 | அர்யமான், 15பி,கண்ணகி பரமேஸ்வரி லேயவுட் , நஞ்சுண்டபுரம் ரோடு , கோயம்புத்தூர். | 31000 | 5385 | 36835 |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய "ஸ்டேஜிங் எலிமென்ட்ஸ்" சென்னை நிறுவன குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டபடுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெ ற்று பணி உத்திரவு வழங்கியமையை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1003/2020/எச்1)

14.09.2020

**பொருள் :11**

மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் வரி செலுத்துவதற்கும் மேலும் பிற இ -சேவை மையங்கள் மூலம் பெறப்படும் சான்றிதழ்கள் பெறுவதற்கு வரு கை தரும் பொது மக்கள் மற்றும் இந்நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் குடிநீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே இந்நகராட்சிக்கு ஒரு புதிய குடிநீர் சுத்திகரிப்பான் (Ultra Violet Water Purifier ) வாங்கி அமைக்க பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு - 15ன் கீழ் விலைப்புள்ளி கோரப்பட்டதில் M/S Crossfields Water Purifiers Ltd, Coimbatore நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே மேற்கண்ட நிறுவனத்திமிடருந்து ஒரு புதிய

**தீர்மான எண்.850 பதிவுசெய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | குடிநீர் சுத்திகரிப்பான் (**Ultra Violet Water Purifier** ) விநியோம் செய்தமைக்கு செலவித் தொகை ரூ.**84854/-**ஐ மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கம் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>**பதிவு செய்யலாம்** (ந.க.எண்.**1176/2020/E1)** | |
| 14.09.2020 | **பொருள் :12**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் இயங்கிவந்த உணவு விடுதியின் வாடகை தொகை இன்றைய தேதியில் வரிவிதிப்பு எண் .085/B001/00029--க்கு தொகை ரூ 16,24,860/- நிலுவையில் உள்ளது . நிலுவைத்தொகையினை செலுத்தக்கோ ரி அறிவிப்புகள் அனுப்பப்பட்டதில் குத்தகைதாரர் திரு .வி.பி.ஆறுமுகப்பெருமாள் என்பவர் கடந்த 26.02.2020 அன்று உணவு விடுதியை ஒப்படைப்பு செய்வதாக விண்ணப்பித்துள்ளார் . மேலும் மேற்கண்ட விண்ணபத்தில் குத்தகைதாரரால் நகராட்சிக்க செலுத்தப்பட்ட தொகை ரூ .37,88,020/-ஐ குத்தகை மூன்றாண்டு உரிம காலம் 01.06.2017 முதல் 31.05.2020 - வரை உள்ள 36 மாதங்களுக்கு உண்டான வாடகைக்கான தொகை ரூ.34,40,880/-ஐ வரவு வைத்து மீதம் உள்ள தொகை ரூ .3,47,140/-ஐ திரும்ப வழங்குமாறு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண் .WP(MD) 6577/2020 வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கில் அன்னாரின் கோரிக்கையை பரிசீலனை செய்து உத்திரவு பிறப்பிக்க ஆணையிடப்பட்டிருந்தது . இந்நிலையில் கொரோனா நோய் தொற்று எற்பட்டதால் தமிழக அரசால் 27.03.2020 முதல் 31.08.2020 வரை ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு பேருந்து நிலைய ம் இயங்காமல் இருந்தது . தற்போது வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி குத்தகைதாரர் உணவு விடுதியினை காலி செய்துள்ளதாகவும் , மேற்கண்ட காரணங்களை தெரிவித்து முன்வைப்புத் தொகையினை வாடகைக்கு ஈடு செய்து கொண்டு மீத தொகையினை வழங்குமாறு தெரிவித்ததால் உணவு விடுதியினை அலுவலக கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, குத்தகைதாரர் உணவு விடுதயினை ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்து காலி செய்துள்ளதாலும் , உணவு விடுதியை பயன்படுத்திய காலம் வரைக்கான வாடகைத் தொகையினை ஏல கட்டுப்பாட்டு விதிகளின்படி சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் செலுத்திய முன் வைப்புத் தொகையில் ஈடு செய்து கொண்டு அன்னார் செலுத்த வேண்டிய வாட்கைத் தொகைக்கு எவ்வித இழப்பீடு இல்லை என்பதாலும் வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி உணவு விடுதியை அலுவலக கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாகவும் நிர்வாக நலன் கருதி புதிதாக பொது மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மூலம் ஏலம் /குத்தகைக்கு விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>** அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.851**<br>**<u>அனுமதிக்கப்பட்டது.</u>** |

| 14.09.2020 | பொருள் 13 | தீர்மான எண்.852 அனுமதிக்கப்பட்டது. |
|---|---|---|

**பொருள் 13**

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்ட பணி யாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா மற்றும் வட்டித் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | ஓய்வு பெற்ற தேதி | இறந்த தேதி | சிறப்ப சேம நல நிதி சந்தா தொகை | வட்டித் தொகை | அரசு பங்குத் தொகை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.முருகன், தூய்மை பணியாளர் | 30.06.2019 | - | 2960 | 33691 | 10000 | ரூ.46651 |
| 2. | திருமதி.மருதாயி, க/பெ.துரைசாமி, தூய்மை பணியாளர் | 30.06.2020 | - | 2960 | 24411 | 10000 | ரூ.37371 |
| 3. | திருமதி.பாண்டியம்மாள் க/பெ.மாமுண்டி, தூய்மை பணியாளர் | - | 19.01.2020 | 2960 | 33229 | - | ரூ.36189 |
| 4. | திரு.ஜெயபாண்டி/ முனியாண்டி, தூய்மை பணியாளர் | - | 10.01.2020 | 2960 | 18105 | - | ரூ.21065 |
| 5. | திரு.பாக்கியலெட்சுமி/ ஆறுமுகம், தூய்மை பணியாளர் | - | 21.04.2020 | 2960 | 31084 | - | ரூ.34044 |
| 6 | திரு.பொன்னுச்சாமி/ செங்கட்டி | - | 03.10.2018 | 2960 | 17408 | - | ரூ.20368 |
| 7 | திரு.நல்லுச்சாமி, சாலை பணியாளர் | 30.04.2018 | - | 2960 | 15245 | 10000 | ரூ.28205 |
| 8 | திருமதி.செல்லாயி / நாகராஜன், தூய்மை பணியாளர் | 30.06.2020 | - | 2960 | 17415 | 10000 | ரூ.30375 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | திருமதி.குள்ளி/ துரைசாமி, தூய்மை பணியாளர் | 30.06.2019 | - | 2960 | 22429 | 10000 | ரூ.35389 |
| 10 | திரு.அ.லெட்சுமணன், மேலாளர் | 31.03.2020 | - | 2960 | 14399 | 10000 | ரூ.27359 |
| 11 | திரு.ந.பழனிச்சாமி, உதவியாளர் | 30.04.2020 | - | 2960 | 20014 | 10000 | ரூ.32974 |
| 12 | திருமதி.மீனாட்சி/ சடையன், தூய்மை பணியாளர் | 30.06.2019 | - | 2960 | 23128 | 10000 | ரூ.36088 |

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதிக்கலாம்

2.சிறப்பு சேமநலநிதி சந்தா தொகையை SPF கணக்கிலிருந்தும் வட்டித் தொகை மற்றும் அரசு பங்குத் தொகையை வருவாய் நிதியிலிருந்தும் வழங்க அனுமதிக்கலாம்.

14.09.2020

**பொருள் : 14**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா தடுப்பு பணிகள் , டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளுக்காகவும் தேவைப்படும் பிளீச்சிங் பவுடர் - 5 MT, லைசால் - 200 லிட்டர், சானிடைசர் - 100 லிட்டர், கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ் , திருச்சி நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ .4.30 லட்சம் பொ து நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.853 அனுமதிக்கப்பட்டது.**

14.09.2020

**பொருள் :** 15

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள சிறு பாலங்கள் பழுதாகியுள்ளது . எனவே புதிதாக சிறு பாலங்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் :26 தீராம்பட்டி நம்ம கழிப்பறை அருகில் சிறு பாலம் அமைத்தல் | 2.00 |
| 2 | வார்டு எண் :1 விடத்திலாம்பட்டி மெயின் சாலையில் சிறு பாலம் அமைத்தல் | 1.70 |
| 3 | வார்டு எண் :7 ஏட்டுதெரு மினி பவர் பம்ப் அருகில் சிறு பாலம் அமைத்தல் | 0.80 |

மேற்கண்ட பணியினை பொது நிதி 2020–21–ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.854**
**அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**